அனுப்பிவைத்தாலும்கூட, அவர்கள் குறிப்பிட்ட வரைமுறை வைத்திருக்கிறார்கள், ஒரு இலட்சம் இரயில்வே அலகுகள் அந்த இரயில்வே கடவினை கடந்தால்தான் அதற்கு அனுமதி கொடுக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு, அவர்கள் குறிப்பிடுகின்ற வரைமுறை இருந்தால் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

170—

தடுப்பணை சீரமைத்தல்

***3718—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், செட்டிகுளம் ஊராட்சி, அனுமன் நதியிலுள்ள தடுப்பணையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராசிபுரம் வட்டம், செட்டிகுளம் ஊராட்சியிலே அனுமன் நதியில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை பழுதாகியுள்ளது சரிசெய்யப்படுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். மக்கள் எண்ணுகின்றதை, எண்ணுகின்றபோதே செய்து முடிக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) செட்டிகுளம் ஊராட்சி, ஸ்ரீரெங்கநாராயணபுரம் அருகில் அனுமன் நதியின் குறுக்கே

2013 ஏப்ரல் 8]

பழுதடைந்துள்ள தடுப்பணையைச் சுமார் 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை இந்த நிதியாண்டின் முதல் காலாண்டிலேயே எடுத்து முன்னுரிமை அடிப்படையில் வேலை தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொழியும் மழையாய் கருணை, எரியும் நெருப்பாய் கர்ஜனை, உருகும் மெழுகாய் தியாகம், உருளும் பூமியாய் உழைப்பு, குளிர்ந்த நிலவாய் பரிவு, விரிந்த கடலாய் அறிவு, (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாம் சேர்ந்ததோர் உருவில் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே அம்மா என்னும் ஒரு வடிவில் உள்ள (மேசையைத் தட்டும் ஒலி) தாய்க்கு என் தலை வணக்கம்.

பசி மயக்கத்தில் பறக்க முடியாத பறவைக்கு ஒரு தானியக் கிடங்கையே தானமாகத் தந்ததுபோல், கட்டுத்தொகையையே காப்பாற்ற வழியில்லாமல் போராடிக் கிடந்த எங்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புனிதமிக்க பேரவைக்குள் வந்தமரும் வாய்ப்பைத் தந்தது ஒப்பில்லாத தாயின் சகிப்புத் தன்மையும் ஒன்றரை கோடி தொண்டர்களின் சாட்சிக் கையெழுத்தும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, உங்களின் உத்தரவாதமும் உங்கள் சுட்டுவிரல் அசைவில் சுழலும் தொண்டர்களின் உழைப்பும் எங்களுக்குக் கிட்டாது போயிருந்தால் அன்று நாங்கள் சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணிக்க ஒரு காரணம் தேடியிருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கைதொழுத கணநொடியில் கலிதீர்க்கும் கருணை உருவான உங்கள் ஈகை குணம்தான் பட்டுப்போயிருந்த எங்களுக்குப் பரிவோடு தண்ணீர் ஊற்றி தழைக்க வைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) முன்வைத்த கோரிக்கைகளை இன்முகத்தோடு நிறைவேற்றி எனக்கு வாய்ப்பளித்த ராதாபுரம் தொகுதி மக்களிடம் நான் பெருமிதத்தோடு நடைபோட வழிவகுக்கிறது, உங்கள் வாஞ்சை கொண்ட மனசு. கும்பிட்ட கரங்கள் விலகுவதற்கு முன்பே என் கோரிக்கைளை நிறைவேற்றி, நான் நெஞ்சு நிமிர்ந்து நடப்பதற்கு வாய்ப்பு தருகிறது உங்கள் வள்ளல் மனம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று செட்டிகுளம் ஊராட்சியில் அனுமன் நதியில் தடுப்பணையைச் சீரமைக்க சுமார் 7 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அந்தப் பகுதி மக்களின் மனதில் பால் வார்த்தது உங்களின் ஈகை உள்ளம். அதுமட்டுமா? வள்ளியூர்—ராதாபுரம் சாலையில் மேம்பாலம் அமைப்பதற்கு சுமார் 45 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்து, நெடுநாள் கோரிக்கைக்கு விடிவு தந்தது உங்களின் கனிவுக் கரங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அணு உலை அச்சத்தில் அல்லலுற்றுக் கிடக்கும் கூடங்குளம் மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தவும், கட்டமைப்புத் தேவைகளைக் கருத்தோடு நிறைவேற்றவும் 500 கோடி ரூபாயை அள்ளித் தந்திருக்கும் அம்மா, உங்களை கடையேழு வள்ளல்களையும் விஞ்சிய எட்டாவது வள்ளலாகவே நான் காண்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், தூங்காத விழிகளோடும், துருதுருத்த பணிகளோடும் தன்னை மெய்வருத்தி உழைக்கின்ற பேரறிவுத் தாயே! தங்களின் பொற்பாதங்களை வணங்கி என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி அன்பழகன் அவர்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கெண்டேனஅள்ளி ஊராட்சியில், பெருங்காடு பகுதியிலே ஓடையின் மூலமாக அதிகப்படியான நீர் சென்று சின்னாற்றில் கலக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, பெருங்காடுக்கும் சாஸ்திரமுட்லுக்கும் இடையிலே அந்த ஓடையிலே ஒரு பெரிய தடுப்பணை கட்டவேண்டும். அங்கே பட்டா நிலங்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை. புறம்போக்கு நிலம் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் ஒரு தடுப்பணை கட்டி, அந்தப் பகுதி மக்களுடைய நீராதாரத் தேவையை உயர்த்துவதற்கு அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே தடுப்பணை கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறையின்மூலமாக ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், தில்லைவிளாகம் ஊராட்சியில் பாயக்கூடிய கந்தபரிச்சானாறு, கிளைதாங்கியாறு கலப்பதால், கோடைக் காலங்களில் ஆறுகளில் தண்ணீர் வற்றிவிடுவதால் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் கடல் நீர் உட்புகுவதால் அங்கு நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, 1,500 ஏக்கர் நிலமும் கடல் நீரால் பாதிக்கப்படுகிறது. ஆகவே, கடலின் முகத்துவாரத்தில் தடுப்பணை கட்டிக் கொடுத்தால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளும் பயன்பெறுவார்கள். அதேபோல நிலத்தடி நீரும் குடிநீருக்குப் பயன்படுத்தப்படும். ஆகவே, பொதுமக்களின் நலன் கருதி, கந்தபரிச்சான் ஆற்றின் கடலின் முகத்துவாரத்தில் தடுப்பணை கட்டிக்கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த ஆண்டு 39 இடங்களிலே கடல் நீர் உட்புகாவண்ணம் தடுப்பணைகள் கட்டுவதற்காக நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். உறுப்பினருடைய கோரிக்கை எந்தப் பகுதியிலே என்பதை துறையின்மூலமாக ஆய்வு செய்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*